**செய்தி வெளியீடு எண்: 765** **நாள்: 07.11.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் இன்று **(7.11.2019)** தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள், புதுடில்லியில் **5.11.2019** அன்று நடைபெற்ற விழாவில், இந்திய உணவு மற்றும் வேளாண்மைக்கான வர்த்தக அமைப்பின் சார்பில் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட **2019**–ஆம் ஆண்டுக்கான சிறந்த வேளாண் மாநிலத்திற்கான **உலக வேளாண் விருதினை** காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இந்திய உணவு மற்றும் வேளாண்மைக்கான வர்த்தக அமைப்பு, வேளாண் கொள்கை, வேளாண் வணிக வசதி மற்றும் வேளாண்மையை உலக அளவில் ஊக்கப்படுத்தி, விவசாயிகளை மேம்படுத்தும் ஒரு தேசிய அளவிலான அமைப்பாகும். இந்த அமைப்பின் மூலம், வேளாண்மைக்கான சீரிய பங்களிப்பினை நல்கும் தனிநபர் மற்றும் நிறுவனங்களை ஊக்கப்படுத்தி அங்கீகாரம் அளிக்கும் வகையில், ‘‘உலக வேளாண் விருது’’ “Global Agriculture Award” என்ற விருதினை 2008ஆம் ஆண்டிலிருந்து வழங்கி வருகிறது. இவ்விருது வழங்கும் குழுவின் தலைவர் இந்திய பசுமைப்புரட்சியின் முன்னோடியான திரு. M.S சுவாமிநாதன் அவர்கள் மற்றும் சர்வதேச அளவில் சிறந்த அறிஞர்கள் உறுப்பினர்கள் ஆவார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசால் வகுக்கப்பட்ட பல புதிய சீரிய கொள்கைகள் மற்றும் பல்வேறு திட்டங்களின் மூலம் விவசாயிகளின் வருமானம் அதிகரித்துள்ளதோடு, வேளாண் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. சில முக்கிய வேளாண்மைத் துறை திட்டங்கள்:–

1. கூட்டுப் பண்ணைய முறை
2. ஒருங்கிணைந்த கூட்டுப் பண்ணையம்
3. 100 சதவீத மானியத்துடனான நுண்ணீர்ப் பாசனம்

4. உழவன் கைபேசி செயலி
5. நீடித்த நிலையான மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம்
6. இயந்திரங்கள் வாடகை மையங்கள்
7. சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் அமைத்தல்
8. பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம்
9. காய்கறி மற்றும் பழங்களுக்கான வினியோக தொடர் மேலாண்மை திட்டம்
10. தமிழ்நாடு உணவு பதப்படுத்தும் கொள்கை
11. தமிழ்நாடு வேளாண் விளைபொருள்கள் மற்றும் கால்நடை ஒப்பந்த பண்ணையம் மற்றும் செயலிகள் (ஊக்குவித்தல் மற்றும் உதவுதல் சட்டம் 2019).

மேற்காணும் சீரிய முயற்சிகளின் விளைவாக, 100 மெட்ரிக் டன்னிற்கும் கூடுதலாக உணவு உற்பத்தி எட்டப்பட்டுள்ளது. இத்தகைய சீரிய முயற்சிகளை ஊக்கப்படுத்தும் வகையில், 2019–ஆம் ஆண்டிற்கான ‘‘உலக வேளாண் விருதின்’’ கீழ் சிறந்த வேளாண் மாநிலத்திற்கான விருதிற்காக தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டு, புதுடில்லியில் 5.11.2019 அன்று நடைபெற்ற விழாவில் விருது வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆப., வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சீங் பேடி, இ.ஆ.ப., தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் செயல் அலுவலர் மற்றும் சிறப்புச் செயலாளர் திரு.சி. முனியநாதன், இ.ஆ.ப., வேளாண்மைத் துறை இயக்குநர் திரு. வி. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் என்.சுப்பையன், இ.ஆ.ப., வேளாண்மைத்துறை கூடுதல் இயக்குநர் திருமதி ஜெ. விஜயராணி, இ.ஆ.ப., வேளாண் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் முனைவர் ஆர். முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**